DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC 181 / 2024 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 1 |
| Name | திரு அருணாச்சலம் |
| Father Name | தங்கப்பழ நாடார் |
| Village | கோட்டைகாடு |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜரில்லை . எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 29-05-2026.(நேரம்: 12.36PM )**

**முதல்விசாரணை**

1. நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன்.

2.எதிரி மீது வழக்கு காசோலை தொகையான ரூபாய் 2,00,000/- வரப்பற்றுவதற்காக மாற்றுமுறை ஆவணம் சட்டம் பிரிவு 138 உடனினைந்த 142 பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட மனுவில் கண்டுள்ள சங்கதிகளை இதன் ஒரு அங்கமாக வாசித்துகொள்ள பிராத்திக்கிறேன்.

3. நான் இன்று பிராமண வாக்குமூல அபிடவிட் தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையே.

4. அதில் ஒவ்வொரு பக்கத்திலும் படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன்.

5.எதிரி கடந்த 20.07.2023 ஆம் தேதி தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் சிறுதொண்டநல்லூர் கிளை வங்கியின் 061255 என்ற எண் கொண்ட ரூபாய் 2,00,000/- க்கான காசோலையை என் பேருக்கு

எழுதிக்கொடுத்துள்ளார். **அந்த காசோலை மசாஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

6.மேற்கண்ட மசாஆ 1 காசோலையை எனது வங்கியான கரூர் வைசியா வங்கியின் பணம் பெறுவதற்காக தாக்கல் செய்தபோது மேற்கண்ட மசாஆ 1 காசோலையானது எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று திரும்பி வந்துள்ளது என்ற விவரம் குறித்து கரூர் வைசியா வங்கி எனக்கு **21.07.2023 ஆம் தேதி வழங்கிய Return Memo மசாஆ 2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

7.மேற்கண்ட மசாஆ 1 காசோலை தொகையை திரும்ப செலுத்த சொல்லி எதிரிக்கு அவரது முகவரிக்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய 01.08.2023 தேதியிட்ட சட்டபூர்வமான அறிவிப்பு **மசாஆ 3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

8. மசாஆ 3 சட்டபூர்வ அறிவிப்பை பதிவுதபால், அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் அனுப்பியதை காண்பிக்கக்கூடிய தபால் அலுவலக அஞ்சல் ரசீது **மசாஆ 4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

9.மசாஆ 3 சட்டபூர்வமான வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி சார்பில் பெற்றுக்கொண்டதற்கான அவரது சார்பாக கையொப்பம் இடப்பட்ட அஞ்சல் ஒப்புகை அட்டை **மசாஆ 5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.